

திருச்சியில் கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு அவர்கள் டெல்டா தொகுதிகளுக்குட்பட்ட 41 மாவட்டச் செயலாளர்களுடன் காணொலி வாயிலாக நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்று உறுப்பினர் சேர்க்கையை விரைவில் முடிக்க துரிதப்படுத்தி ஆலோசனைகள் வழங்கினார்.

### நாமக்கல் மேற்கு மாவட்டம் ஒன்றிய, நகர, பேரூர்

# பொறியாளர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் நேர்காணல்!

### மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி அறிவிப்பு!



நாமக்கல், ஆக. 10 -

நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில், நாமக்கல் மேற்கு மாவட்டம் ஒன்றிய, நகர, பேரூர் பகுதி பொறியாளர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பொறுப்புக்கான நேர்காணல் எனது (கே.எஸ். மூர்த்தி) தலைமையில் நாளை (11.08.2025- திங்கட்கிழமை) காலை 9.00 மணியளவில் திருச்செங் கோட்டில் உள்ள நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க அலுவலகத்தில் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் முன்னிலையில் நடைபெற உள்ளது.

நேர்காணல்நிகழ்ச்சியில் மாநில பொறியாளர் அணி துணை செயலாளரும், பொறியாளர் அணி ஈரோடு மண்டல பொறுப்பாளருமான அம்பாள் எஸ்.எ.நந்தகுமார் கலந்து கொண்டு நேர்காணலை நடத்துகின்றார். அதுசமயம் ஒன்றிய, நகர, பேரூர் பொறியாளர் அணிக்கு விண்ணப்பித்துள்ள அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 7ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி, திருச்சி அண்ணா ஸ்டேடியம் ரவுண்டானா முதல் டி.வி.எஸ். டோல்கேட் வரை அமைதி பேரணியாகச் சென்று கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மாலை அணிவித்து மரியாதையை செலுத்தினார். இந்த நிகழ்வில் மாநகரச் செயலாளர் மு.மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கே.என்.சேகரன், சபியுல்லா, மாவட்ட நிர்வாகிகள் கோவிந்தராஜ், செங்குட்டுவன், லீலாவேலு, பகுதிச் செயலாளர் மணிவேல் மற்றும் மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளை, கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர், கலைஞர் அவர்களின் 7ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு திருப்பூர் தெற்கு மாவட்டம், உடுமலைப் பேட்டை பேருந்து நிலையம் முன்பு வைக்கப்பட்டிருந்த கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் தலைமையில், நகர கழக செயலாளர் சி.வேலுச்சாமி முன்னிலையில் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினர். இதில் மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், இந்நாள், முன்னாள் மக்கள் பிரதிநிதிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் மல்லூர் பேரூர் கழகத்தின் சார்பில் தலைவர் கலைஞரின் 7ம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி. மல்லூர். பேரூர் கழக அலுவலகத்தின் முன்பு கலைஞரின் திருவுருவப் படத்திற்கு பேரூர் கழக பொறுப்பாளர். ந.சுரேந்திரன் மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தினார். உடன் நிர்வாகிகள் இருந்தனர்.

### பஹல்காம் தீவிரவாதிகள் தாக்குதலில் குண்டடிப்பட்டு,

# முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினின் முயற்சியால் நலம்பெற்ற டாக்டர் ஏ.பரமேஸ்வரன் - குடும்பத்தினர் முதல்வருக்கு நன்றி!

### சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேரில் சந்தித்து தெரிவித்தனர்!



சென்னை, ஆக.10-

பஹல்காம் தீவிரவாதிகள் தாக்குதலில் குண்டடிப்பட்டு, முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் முயற்சியால் நலம் பெற்ற டாக்டர் ஏ.பரமேஸ்வரன் மற்றும் அவர் குடும்பத்தினர் நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

ஜம்முவின் அனந்த்நாக் மாவட்டத்தில் உள்ள பஹல்காமில் கடந்த ஏப்ரல் 22 அன்று நடைபெற்ற பயங்கரவாதத் தாக்குதலில் தமிழ்நாட்டைச் சேர்ந்த டாக்டர் ஏ.பரமேஸ்வரன் அவர்கள் குண்டடிப்பட்டு புதுடெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தபோது, “அவரது மருத்துவ மற்றும் பிற செலவுகளை தமிழ்நாடு அரசே ஏற்கும்” என்று முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உறுதிமொழி அளித்து சிகிச்சை பெற்று வந்தார்.

அத்துடன், முதலமைச்சர் அவர்கள், புதுடெல்லி சென்றிருந்த போது, எய்ம்ஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த டாக்டர் ஏ.பரமேஸ்வரன் அவர்களை நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் முயற்சியினால் நடைபெற்ற சிகிச்சையின் காரணமாக நலம் பெற்று இல்லம் திரும்பிய டாக்டர் ஏ.பரமேஸ்வரன் அவர்களும் - அவர் குடும்பத்தாருமான அவரது துணைவியார் டாக்டர் ம.நயன்தாரா, தந்தையார் பி.ஆறுமுகம், மாமனார் டாக்டர் டி.கே.மணிகுமார், மாமியார் டாக்டர் ஜெ.சித்ரா, மாமன் டாக்டர் வேதாந்த சீனிவாசன் ஆகியோர் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களை சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், நேற்று முன்தினம் (08.08.2025) காலை, நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

இந்நிகழ்வின்போது கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், வி.செந்தில்பாலாஜி, அமைச்சர் தங்கம் தென்னரசு, கழக விவசாய அணிச் செயலாளரும் - டெல்லி சிறப்பு பிரதிநிதியுமான ஏ.கே.எஸ்.விஜயன், செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் உடனிருந்தனர்.

### கோவைக்கு வருகை தரும் கழகத் தலைவர் –

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

### மாவட்டச் செயலாளர்கள் நா,கார்த்திக் – தொண்டாமுத்தூர் அ.ரவி – தளபதி முருகேசன் அறிக்கை!

கோவை, ஆக.10-

பொன்னான திட்டங்களை செயல்படுத்தி, பொற்கால ஆட்சி நடத்தி வரும் திராவிட மாடல் அரசின் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (10.8.2025 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 4.45 மணியளவில் சென்னையில் இருந்து விமானம் மூலம் கோவை விமான நிலையம் வருகை தர உள்ளார்.

கழகத் தலைவர் அவர்களுக்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி தலைமையில், ஒருங்கிணைந்த கோவை மாவட்டக் கழகத்தின் சார்பில் மாபெரும் பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்கப்படுகிறது என்று கோவை மாநகர் மாவட்டச் செயலாளர், நா. கார்த்திக், வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

அதுசமயம், இவ்வரவேற்பு நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மேயர், தலைமைக் கழக நிர்வாகிகள், துணை மேயர், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய கழக, நகர கழக, பகுதி கழக, பேரூர் கழக, வட்டக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், அனைத்து உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டக் கழக நிர்வாகிகள்,

அனைத்து கழக செயல் வீரர்கள், அனைத்து கழகத் தொண்டர்கள், BLA-2, BDA பூத் கமிட்டி நிர்வாகிகள், உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்குமாறு ஒருங்கிணைந்த கோவை மாவட்டக் கழகத்தின் சார்பில் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர்கள் தங்களது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

### தமிழ்நாட்டில் e-NAM தளத்தில்

# விவசாயிகளின் பதிவை மேம்படுத்த ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

### மக்களவையில் – தருமபுரி ஆ.மணி கேள்வி!



புதுடெல்லி, ஆக.10-

நடைபெற்று வரும் மழைகால கூட்டத்தொடரில், மின்னணு பெயரின் கீழ் தமிழ்நாடு மாநிலத்தில், குறிப்பாக தருமபுரி தொகுதியில், தேசிய வேளாண் சந்தை (eNAM) தளத்தில் தற்போது பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த விவசாயி களின் எண்ணிக்கை என்ன? என்று மக்களவையில் தரும புரி தொகுதி ஆ.மணி கேள்வி எழுப்பினார்.

அவரது கேள்விகள் வருமாறு:-

தர்மபுரி மாவட்டத்தில் உள்ள eNAM தளத்தில் விவசாயிகளின் பதிவை ஊக்குவிக்கவும் மேம்படுத்தவும் ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

தமிழ்நாட்டில் உள்ள கூடுதல் மண்டிகள் மற்றும் மாவட்டங்களுக்கு, குறிப்பாக தருமபுரி போன்ற பகுதிகளில், eNAM தளத்தின் அணுகல் மற்றும் செயல்பாட்டை விரிவுபடுத்துவதற்கான திட்டங்கள் ஏதேனும் உள்ளதா?

அப்படியானால், தமிழ்நாட்டில் குறிப்பாக தருமபுரி மாவட்டத்தில் eNAM உடன் ஒருங்கிணைக்க முன்மொழியப்பட்ட புதிய மண்டிகளின் எண்ணிக்கை உள்ளிட்ட விரிவாக்க திட்டங்களின் விவரங்கள் என்ன? என்று மாநில வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ராம்நாத் தாகூரிடம் மக்களவையில் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஆ.மணி கேள்வி எழுப்பினார்.



கரூர் கலைஞர் அறிவாலயத்தில் இருந்து கரூர் பேருந்து நிலையம் வரை, நடைபெற்ற மாபெரும் அமைதிப் பேரணி முடிவிலும், மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயம் முன்பும், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 7 ம்ஆண்டு நினைவு நாளையொட்டி, முத்தமிழ் அறிஞரின் திருவுருவப் படத்திற்கு கரூர் மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். கழக மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.